©
தமிழ்நாடு அரசு
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 3.20 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 49] சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 14, 2016
கார்த்திகை 29, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு–2047

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 187, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 27 செப்டம்பர் 2016.]*

1979–ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினையும் பணி நிலைமைகளையும் முறைப்படுத்தல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 30/1979) 35–ஆம் பிரிவைச் சேர்ந்த (1)–ஆம் உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 1983–ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினையும் பணி நிலைமைகளையும் முறைப்படுத்தல்) (தமிழ்நாடு) விதிகளில், பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார். இதன் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 35–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கோரியுள்ளவாறு, ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில்,–

படிவம் XIII–க்கு பதிலாக பின்வரும் படிவம் அமைத்துக்கொள்ளப்படவேண்டும்.

**“படிவம் XIII**

(விதி 49–ஐ காண்க)

ஒப்பந்ததாரரால் பணியிலமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் குறித்த பதிவேடு

ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி.

நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பணியிலமர்த்தப்பட்டுள்ள
நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி.

முதன்மை வேலை அளிப்பவரின் பெயர் மற்றும் முகவரி.

| தொடர் எண் | புலம்பெயர்ந்த தொழிலாளரின் பெயர் மற்றும் குடும்பப்பெயர் | வயது மற்றும் பாலினம் | தந்தை / கணவரின் பெயர் | பணியின் தன்மை | புலம்பெயர்ந்த தொழிலாளரின் நிரந்தர வீட்டு முகவரி (கிராமம், வட்டம் மற்றும் மாவட்டம்) | உள்ளூர் முகவரி | பணியிலமர்த்தப்பட்ட நாள் | புலம்பெயர்ந்த தொழிலாளரின் கையொப்பம் அல்லது பெருவிரல் ரேகைப் பதிவு | பணிநீக்கம் செய்யப்பட்ட நாள் | பணிநீக்கம் செய்யப்பட்டதற்கான காரணங்கள் | குறிப்புரைகள் | தொழிலாளரின் புகைப்படம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | 13)” |
| | | | | | | | | | | | | |

ஒப்பந்ததாரர் அல்லது அவரால்
ஏற்பளிக்கப்பட்டவரின் கையொப்பம்.

**பி. அமுதா,**
அரசுச் செயலாளர்.

**(தமிழாக்கம்)**

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 188, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 29 செப்டம்பர் 2016.]*

2009 ஆம் ஆண்டு சட்டப்படியான எடையளவைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/2010) 53 ஆம் பிரிவின் (1) மற்றும் (2)–ஆம் உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு 2011–ஆம் ஆண்டு சட்டப்படியான எடையளவைகள் (அமலாக்கம்) விதிகளில் செய்யக் கருதியுள்ள கீழ்க்காணும் திருத்தத்தின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 53(4)–ஆம் உட்பிரிவில் கோரியுள்ளவாறு அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து பதினைந்து நாட்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் இந்த வரைவுத் திருத்தம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், யாதொரு நபரிடமிருந்து வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அவற்றை, சென்னை–600 006–இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக, அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009, என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

## வரைவுத் திருத்தம்

மேற்சொன்ன விதிகளில் அட்டவணை–XI–க்கு பதிலாக, கீழ்க்காணும் அட்டவணை அமைத்துக்கொள்ளப்படவேண்டும். அதாவது:–

## அட்டவணை – XI

(25 ஆம் விதியைக் காண்க)

## பல்வேறு குற்றங்களுக்கான இணைக்கக் கட்டணங்கள்

| *தொடர் எண்* | *குற்றங்கள்* | *தண்டனைப் பிரிவு* | *இணைக்கக் கட்டணம்* | |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | |
| 1. | பிரிவு 8(3) நிலையான எடை, அளவை அல்லது எண்ணுகை நீங்கலாக, பிற எடை, அளவை அல்லது எண்ணுகையைப் பயன்படுத்துதல். | 25 | | ரூ. 2,500 |
| 2. | பிரிவு 8(4) தரங்களுக்கு இணக்கமாக இராத எடை, அல்லது அளவையைத் தயாரித்தல். | 27 | | ரூ. 2,000 |
| 3. | பிரிவு 10 வரையறுக்கப்பட்ட எடை, அளவை அல்லது எண்ணுகையைத் தவிர பிற எடை, அளவை அல்லது எண்ணுகை வாயிலாக பொருட்களின் வணிக நடவடிக்கை அல்லது கொடுக்கல் வாங்கல் ஒப்பந்தம் தொடர்பானவை. | 28 | | ரூ. 1,000 |
| 4. | பிரிவு 11 சில்லரை அல்லது மொத்த வணிகர்கள் அல்லது தயாரிப்பாளர்கள் அல்லது இறக்குமதியாளர்கள் நிலையான எடை அல்லது அளவை அல்லது எண்ணுகை நீங்கலாக, விலைப்பட்டியலைக் குறிப்பிடுதல் அல்லது அறிவித்தல் அல்லது வெளியிடுதல் அல்லது காட்டிவைத்தல் அல்லது விலையை வசூலித்தல். | 29 | சில்லரை அல்லது மொத்த வணிகர்களின் இணக்கத்திற்கான விண்ணப்பமெனில், ரூ. 2,000 | தயாரிப்பாளர்கள் அல்லது இறக்குமதியாளர்களின் இணக்கத்திற்கான விண்ணப்பமெனில், ரூ. 10,000 |
| 5. | பிரிவு 12 ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அளவைவிட குறைவாகவோ அதிகமாகவோ ஏதேனும் பொருட்கள் அல்லது பொருள்அல்லது சேவைகளை கோருதல் அல்லது பெறுதல். | 30 | | ரூ. 1,000 |
| 6. | பிரிவு 17 தயாரிப்பாளர்கள், வணிகர்கள் அல்லது பழுதுபார்ப்பவர்கள் பதிவுருக்கள், பதிவேடுகளை வைத்து வருதல் தொடர்பாக இணக்கமாகச் செயல்படாமை மற்றும் கோருகின்ற போது, எடை, அளவை ஆவணங்கள், பதிவேடுகளை அளிக்காமை. | 31 | | ரூ. 500 |
| 7. | பிரிவு 18(1) சில்லரை அல்லது மொத்த வணிகர்கள் அல்லது தயாரிப்பாளர்கள் அல்லது இறக்குமதியாளர்கள் முன்னரே சிப்பம் செய்யப்பட்ட பொருள் குறித்த நேர்வில், அறிவிப்பது தொடர்பாக இணக்கமாகச் செயல்படாமை. | 36(1) | சில்லரை அல்லது மொத்த வணிகர்களின் இணக்கத்திற்கான விண்ணப்பமெனில், ரூ. 5,000 | தயாரிப்பாளர்கள் அல்லது இறக்குமதியாளர்களின் இணக்கத்திற்கான விண்ணப்பமெனில், ரூ. 25,000 |
| 8. | பிரிவு 18(2) சில்லரை அல்லது மொத்த வணிகர்கள் அல்லது தயாரிப்பாளர்கள் அல்லது இறக்குமதியாளர்கள் முன்னரே சிப்பம் செய்யப்பட்ட பொருள்களின் நிகர அளவு தொடர்பாக இணக்கமாகச் செயல்படாமை. | 36(2) | சில்லரை அல்லது மொத்த வணிகர்களின் இணக்கத்திற்கான விண்ணப்பமெனில், ரூ. 10,000 | தயாரிப்பாளர்கள் அல்லது இறக்குமதியாளர்களின் இணக்கத்திற்கான விண்ணப்பமெனில், ரூ. 50,000 |
| 9. | பிரிவு 23 எடை மற்றும் அளவையை உரிமம் இல்லாமல் தயாரித்தல். | 45 | | ரூ. 5,000 |

| *தொடர் எண்* | *குற்றங்கள்* | *தண்டனைப் பிரிவு* | *இணக்கக் கட்டணம்* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 10. | பிரிவு 23 எடை அல்லது அளவையை உரிமம் இல்லாமல் பழுது பார்த்தல்/விற்பனை செய்தல். | 46 | ரூ. 2,000 |
| 11. | பிரிவு 24 வணிக நடவடிக்கையில் அல்லது பாதுகாப்பில் சரிபார்க்கப்படாத எடை அல்லது அளவையைப் பயன்படுத்துதல். | 33 | ரூ. 5,000 |
| 12. | பிரிவு 33 சரிபார்க்காமல் எடையை அல்லது அளவையை விற்பனை செய்தல். | 33 | ரூ. 5,000 |
| 13. | பிரிவு 34 தரமற்ற எடை அல்லது அளவைகளின் மூலம் பொருட்களை விற்பனை செய்தல் அல்லது வழங்குதல். | 34 | ரூ. 2,500 |
| 14. | பிரிவு 35 தரமற்ற எடை அல்லது அளவைகளின் மூலம் சேவையினை அளித்தல். | 35 | ரூ. 2,500 |
| 15. | பிரிவு 47 உரிமத்தினை மோசடியாகத் திருத்துதல். | 47 | ரூ. 5,000 |
| 16. | விதி 23—இவ்விதிகளின் ஏதேனும் விதித்துறைகளை மீறுதல். | 53(3) | ரூ. 5,000 |

**பி. அமுதா,**
அரசுச் செயலாளர்.

**(தமிழாக்கம்)**

**ந. அருள்**,
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 199, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 18 அக்டோபர் 2016.]*

1951—ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 69/1951) 43—ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவு மற்றும் 18—ஆம் பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், *தமிழ்நாடு அரசிதழின்* பாகம் III—1(a) பிரிவில் 80 முதல் 82 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 18—05—2005—ஆம் நாளிட்ட SRO A-25/2005—ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1955—ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர் விதிகளில் வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 43—ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து ஆறு வாரங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர், இந்த விரைவுத் திருத்தம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர் எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை—600 006—இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலம் அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

***வரைவுத் திருத்தம்***

மேற்சொன்ன விதிகளில், VII ஆம் அத்தியாயத்திற்குப் பின்னர், பின்வரும் அத்தியாயம் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது :—

**''அத்தியாயம் VIII**

**நல அலுவலர்கள்**

**85. நல அலுவலர்கள்.—** முந்நூறு அல்லது மேற்பட்ட பணியாளர்கள் சாதாரணமாகப் பணியமர்த்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு மலைத்தோட்டமும், குறைந்த அளவு ஒரு நல அதிகாரியை நியமிக்க வேண்டும்:

ஆனால், பணியாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து ஐநூறுக்கு மேற்படுகிறவிடத்து, ஆயிரத்து ஐநூறு பணியாளர்களுக்கு அல்லது அதன் பின்ன எண்ணிக்கை ஒவ்வொன்றுக்கு, அத்தகைய எண்ணிக்கை முந்நூறுக்கு மேற்படுமெனில், நல அலுவலர் ஒருவர், உதவி நல அலுவலராகப் பணியமர்த்தப்படவேண்டும்:

**மேலும், ஒரு மலைத்தோட்டத்தில்,—**

(*i*) முந்நூறு அல்லது அதற்கு மேற்பட்ட, ஆனால் ஆயிரத்து ஐநூறுக்கு மேற்படாத பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு, அவர்களில் பெரும்பான்மையான பணியாளர்கள் பெண்களாக இருக்கிறவிடத்து, நியமிக்கப்படும் நல அலுவலர், ஒரு பெண் அலுவலராக இருக்க வேண்டும்.

(*ii*) பணியாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து ஐநூறுக்கு மேற்பட்டு, அதில் முந்நூறுக்கு மேற்பட்ட ஆனால் அயிரத்து ஐநூறுக்கு மேற்படாத பணியாளர்கள் பெண்களாக இருக்கிறவிடத்து, முதலாம் வரம்பு நிபந்தனையின் கீழ் நியமிக்கப்படும் உதவி நல அலுவலர், ஒரு பெண் அலுவலராக இருக்க வேண்டும்; மற்றும்

(*iii*) பெண் பணியாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து ஐநூறுக்கு மேற்படுகிறவிடத்து, ஒவ்வொரு ஆயிரத்து ஐநூறு பெண் பணியாளர்களுக்கு அல்லது அதற்கு மேற்படும் பணியாளர்களின் பின்ன எண்ணிக்கை முந்நூறுக்கு மேற்படுமெனில் அத்தகைய பின்ன எண்ணிக்கை ஒவ்வொன்றுக்கு ஒரு பெண் அலுவலர் என்ற வீதத்தில், உதவி நல அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

**86. தகுதிகள்.—**

பின்வரும் தகுதிகளைக் கொண்டிராத யாதொரு நபரும் நல அதிகாரியாக நியமிக்கப்படத் தகுதியற்றவராகிறார், அவையாவன:—

(1) (*a*) சென்னை, தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, தொழிலாளர் மேலாண்மையில் பட்ட மேற்படிப்பு அல்லது தொழிலாளர் மேலாண்மையில் பட்டம்; அல்லது

(*b*) பல்கலைக்கழக மாணியக் குழுவின் மானியத்தைப் பெறுவதற்காக, பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட யாதொரு, பல்கலைக்கழகத்தில் அல்லது நிறுவனத்தில், சமூகப் பணி, சமூக அறிவியல், பணியாளர் மேலாண்மை, தொழில் உறவுகள் மற்றும் தொழிலாளர் நலன் குறித்த தொழிலாளர் சட்டங்களுடன் தொழிலாளர் உறவுகள் அல்லது சமூக நலன் அல்லது தொழில் உறவுகள் ஆகியவற்றில் ஒன்றை முக்கியப் பாடமாகக் கொண்ட பட்ட மேற்படிப்பு அல்லது பட்டயம்; அல்லது

(*c*) சென்னை, தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, தொழிலாளர் மேலாண்மையில் பட்டய மேற்படிப்பு; அல்லது

(*d*) தமிழ்நாட்டின் உற்பத்தித் திறன் மேம்பாட்டுக் கழகங்கள் அல்லது இதெற்கென மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிறுவனங்களால் வழங்கப்பட்ட, பணியாளர் மேலாண்மை, தொழில் உறவுகள் மற்றும் தொழிலாளர் நலன் ஆகியவற்றில் பட்டய மேற்படிப்பு; அல்லது

(*e*) சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியால் நடத்தப்பெறும் தொழிலாளர் சட்டங்கள் மற்றும் நிருவாகச் சட்டங்களில் பட்டய மேற்படிப்பு; அல்லது

(*f*) பல்கலைக்கழக மானியக் குழுவின் மானியத்தைப் பெறுவதற்காக, பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட யாதொரு பல்கலைக்கழகத்தில் அல்லது நிறுவனத்தில் பட்டம் மற்றும் புதுதில்லி, தேசிய சட்டக் கல்வி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, தொழிலாளர் சட்டத்தில் பட்டயம்.

(2) பணியாற்ற வேண்டிய மலைத்தோட்டத்திலுள்ள பெரும்பான்மைத் தொழிலாளர்களால் பேசப்படும் மொழி குறித்த போதிய அறிவு:

***தமிழ்நாடு அரசிதழில்*** இந்த அறிவிக்கை வெளியிடப்படும் காலத்தில், ஒரு நபர், நல அலுவலராகப் பணியமர்த்தப்பட்டிருக்கும் நேர்வில், மாநில அரசானது, அதனால் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மேற்சொன்ன தகுதிகள் அனைத்தையும் அல்லது அவற்றில் ஏதேனுமொன்றைத் தளாத்திக் கொள்ளலாம்.

**87. நல அலுவலர்களை நியமனம் செய்தல்.—**

(1) நல அலுவலர்கள் பதவியைச் சேர்ந்த காலிப் பணியிடங்கள், மாநிலத்தில் பரந்த அளவில் விற்பனையாகிற இரண்டு நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்படவேண்டும். அதில் ஒன்று தமிழிலும் மறறொன்று ஆங்கிலத்திலும் இருக்க வேண்டும்.

ஆனால், அரசுத் துறை நிறுவனத்தைச் சேர்ந்த மலைத்தோட்டங்கள் மற்றும் அரசால் நிதியுதவி அளிக்கப்படுகிற தனியார் மலைத்தோட்டங்களில் ஏற்படுகின்ற காலிப்பணியிடங்கள் வேலைவாய்ப்பகம் மூலம் நிரப்பப்பட வேண்டும்.

மேலும், வேலை வாய்ப்பகத்திடமிருந்து, காலிப்பணியிடங்களுக்குக் கிடைக்கப்பெறாதது குறித்த சான்றிதழைப் பெற்ற பின்னரே, மேற்சொன்ன மலைத்தோட்டங்களில் ஏற்படுகிற காலிப்பணிடங்கள் குறித்துச் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்பட வேண்டும்.

(2) நல அலுவலர் பதவிக்கான நியமனம், மலைத்தோட்ட உரிமையாளரால் (வேலையளிப்பவர்) நியமிக்கப்பட்ட குழு ஒன்றினால், அப்பதவிக்காக விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து செய்யப்படவேண்டும்.

(3) நியமனம் செய்கிறபோது, நியமிக்கப்பட்ட அலுவலரின் தகுதிகள், வயது, சம்பளம், முன் அனுபவம் மற்றும் ஏனைய தொடர்புடைய விவரங்கள் மற்றும் அவருடைய பணியின் வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றைத் தெரிவித்து, வேலையளிப்பவர், மாநில அரசிடம் அல்லது இதற்காக மாநில அரசால் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய பிற அதிகார அமைப்பிடம் அறிவிக்க வேண்டும்.

**88. நல அலுவலரின் பணி நிலைமைகள்.—**

(1) மலைத்தோட்ட நிருவாக தொழிலாளரின் ஒரு உறுப்பினரின் தகுதி நிலைக்கு நிகரான உரிய தகுதி நிலை நல அலுவலர் ஒருவருக்கு வழங்கப்படும்.

(2) ஒரு நல அலுவலரின் பணி நிலைமைகளானது, மலைத்தோட்டத்தில் நிகரான தகுதி நிலை கொண்ட ஏனைய தொழிலாளர்களுடன் ஒத்திருக்க வேண்டும்.

பணி விடுப்பு அல்லது பணி நீக்கம் குறித்த நேர்வில், நல அலுவலர்/உதவி நல அலுவலருக்கு மலைத்தோட்ட தலைமை அய்வாளரிடம் மேல்முறையீடு செய்வதற்கு உரிமை உண்டு. இது குறித்த அவரின் முடிவு இறுதியானதாக இருப்பதுடன் மலைத்தோட்டதில் வேலையளிப்பவரையும் கட்டுப்படுத்தும்.

நல அலுவலர் பணி விடுவிப்பு/பணி நீக்க ஆணை பெறப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யவேண்டும்.

(3) நல அலுவலர்/உதவி நல அலுவலரின் சம்பளவீதம் மற்றும் படிகள் மற்றும் ஏனைய பணி நிலைமைகள் மலைத்தோட்டத்தில் நிகரான தகுதி நிலை கொண்ட ஏனைய அலுவலர்களுடன் ஒத்திருக்கும்.

(4) நல அலுவலர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு கருதப்பட்ட காரணங்களை எழுத்து மூலமாக அவருக்கு முதலில் தெரிவிக்கப்பட்டு அவரை தற்காத்துக் கொள்வதற்கு போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தாலன்றி மற்றபடி நிருவாகத்தால் அவருக்கு தண்டத்தொகை விதிக்கப்படக்கூடாது.

89. **நல அலுவலரின் கடமைகள்.—** நல அலுவலரின் கடமைகளாவன—

(*a*) மலைத்தோட்ட நிருவாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையே நல்லுறவை பேணும் நோக்கில் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு கலந்தாலோசனைகளை நடத்துதல்;

(*b*) தனிநபர்கள் மற்றும் தொழிலாளர்களின் குறைகளை விரைவில் களைவதற்காக மலைத்தோட்ட நிருவாகத்தின் கவனத்திற்கு எடுத்துச்செல்லுதல் மற்றும் நிருவாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையே தொடர்பு அலுவலராகச் செயல்படுதல்;

(*c*) தொழிலாளர் கொள்கைகளை வடிவமைத்து உருவாக்குவதற்கு மலைத்தோட்ட நிருவாகத்திற்கு உதவுவதற்காக தொழிலாளர்களின் பார்வையில் ஆய்வு செய்து அறிந்துகொள்வதுடன் தொழிலாளர்களுக்குப் புரியும் மொழியில் இந்த கொள்கைகளை எடுத்துரைத்தல்;

(*d*) மலைத்தோட்ட நிருவாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையேயான தகராறு குறித்த நேர்வில் அவரது செல்வாக்கைப் பயன்படுத்தப்படும் நோக்கில் தொழிலகத் தொடர்புகளைக் கண்காணித்து இணக்கமான முறையில் தீர்ப்பதற்கு உதவுதல்;

(*e*) பணி நேரங்களை முறைப்படுத்தல், மகப்பேறு பயன்கள், மருத்துவ சிகிச்சை, நோய் மற்றும் காயங்களுக்கு இழப்பீடு, மற்றும் ஏனைய நலன் மற்றும் சமூக பயன் நடவடிக்கைகள் தொடர்பான சட்டப்படியான ஏனைய கடப்பாடுகளை நிருவாகமும் சம்பந்தப்பட்ட துறைகளும் நிறைவு செய்ய அறிவுரை வழங்குதல்;

(*f*) தனிநபருக்கு காயங்களை ஏற்படுவதை தடுத்தல் மற்றும் பாதுகாப்பான பணி சூழலை பேணுதல் தொடர்பான சட்டப்படியான அல்லது ஏனைய கடப்பாடுகளை நிறைவேற்ற நிருவாகத்திற்கு அறிவுரை வழங்குவதற்கும் உதவுதல்;

(*g*) சம்பந்தப்பட்ட மலைத்தோட்ட துறைகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையேயான உறவுகளை மேம்படுத்தல், இது உற்பத்தித் திறனையும் பணிச்சூழலையும் மேம்படுத்துவதுடன் தொழிலாளர்கள் பணிச்சூழலுக்கு தகுந்தவாறு அவர்களை மாற்றிக்கொள்வதற்கும் உதவும்;

(*h*) பணிகள் மற்றும் கூட்டு உற்பத்திக் குழு, கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பணிக்குழு, துணைக்குழு போன்ற நலகக்குழுக்களை அமைக்க ஊக்கமளித்தல் மற்றும் அதன் பணிகளை கண்காணித்தல்;

(*i*) பணியக உணவகங்கள், ஓய்விடங்கள், பள்ளி, மழலையர் காப்பகங்கள், போதுமான கழிவறை வசதிகள், குடிநீர், மருத்துவ வசதிகள் மற்றும் ஓய்வுக்கால பயன்கள் •போன்றவசதிகளுக்கு வகை செய்ய ஊக்குவித்தல்;

(*j*) ஊதியத்துடன் விடுப்பு வழங்குதலை முறைபடுத்துவதில் மலைத்தோட்ட நிருவாகத்திற்கு உதவுதல் மற்றும் ஊதியத்துடன் கூடிய விடுப்பு மற்றும் ஏனைய விடுப்பு உரிமைகள் தொடர்பான விதித்துறைகளை தொழிலாளர்களிடம் எடுத்துரைத்தல் மற்றும் வருகைதராமையை முறைப்படுத்துவதற்கு விடுப்பு கோரும் விண்ணப்பம் வழங்கலில் தொழிலாளர்களுக்கு வழிகாட்டுதல்;

(*k*) வீட்டுவசதி, சமூக மற்றும் பொழுதுபோக்கு வசதிகள், துப்புரவு போன்ற நல வசதிகள் வழிவகைகுறித்து அறிவுரை வழங்குதல் மற்றும் தனிநபர் பிரச்சினைகள் மற்றும் குழந்தைகளின் கல்வி பற்றி அறிவுரை வழங்குதல்;

(*l*) புதிய தொழிலாளர்கள் மற்றும் கண்கானிப்பாளர்களுக்கு பயிற்சி அளித்தல், தொழிலாளர்களுக்கு மேலும் கல்வி அளிப்பதற்கு, செய்தி வெளியீடுகள் மற்றும் அறிவிப்பு பலகை கண்காணித்து கட்டுப்பாட்டில் வைத்தல், தொடர்பான பிரச்சினைகளுக்கு மலைத்தோட்ட நிருவாகத்திற்கு அறிவுரை வழங்குதல் மற்றும் தொழில் நிறுவனங்களில் அவர்களுடைய வருகையை ஊக்குவித்தல்;

(*m*) தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தவும் அவர்களது நலனை மேம்படுத்தவும் நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்;

(*n*) தொழிலாளர்களுடைய கல்வி வசதிகளை மேம்படுத்தவும் குடும்ப நலத் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளவும் பின்பற்றப்படுவதை ஊக்கப்படுத்தலும்; மற்றும்

(*o*) நேர்விற்கேற்ப கல்வித்துறை அதிகாரிகள் அல்லது ஏனைய முகவரமைப்புகளுடன் ஒருங்கிணைந்து தொழிலாளர்களிடையே கல்லாமையை அடியோடு நீக்குவதற்கான திட்டங்களைச் செயல்படுத்தல்.

**90. நல அலுவலர் ஒழுங்கு நடவடிக்கை இனங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் அல்லது தொழிலாளர்களுக்கு எதிராக நிருவாகத்தின் சார்பாக ஆஜராக வேண்டாம்.—**

யாதொரு நல அலுவலரும் மலைத்தோட்டப் பணிகளில் பணியமர்த்தப்பட்டுள்ள நபருக்கு எதிராக ஒழுக்கம் நடவடிக்கை சார்ந்த வழக்குகளில் நடவடிக்கை எடுக்கவேண்டாம். அல்லது மலைத்தோட்டத்தில் பணியமர்த்தப்பட்ட ஒரு நபர் அல்லது நபர்களுக்கு எதிராக மலைத்தோட்ட நிருவாகம் சார்பில் கணக்கிணக்க அலுவலர், நீதி மன்றம் அல்லது தீர்ப்பாயத்தால் தனிப்பட்ட சாட்சியாக ஆஜராகுமாறு அவர் கேட்டுகொள்ளப்படுகின்ற நேர்வு நீங்கலாக, கணக்கிணக்க அலுவலர், நீதி மன்றம் அல்லது தீர்ப்பாயம் முன்பு அவர் ஆஜராகவோ கூடாது.

ஆனால் இந்த விதியில் கண்டுள்ள எவையும் மலைத்தோட்டப் பணியில் பணியமர்த்தப்பட்டுள்ள நபருக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கை காரணமாக ஏற்படுகின்ற புகார் குறித்த நேர்வில் நல அலுவலரை அணுகுவதிலிருந்து தடுப்பதாக கருதப்படமாட்டாது''.

**பி. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

**(தமிழாக்கம்)**

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 206, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1) துறை, 2 நவம்பர் 2016.]*

1970—ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 37/1970) 35 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) விதிகளில் கீழ்க்காணும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,—

(1) 18 ஆம் விதியைச் சேர்ந்த (1) துணை விதிக்குப் பதிலாக, கீழ்க்காணும் துணைவிதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

"(1) 17 ஆம் விதியைச் சேர்ந்த (1) துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய விண்ணப்பம் வரப்பெற்ற நாளிலிருந்து, முப்பது நாட்களுக்குள், பதிவு அதிகாரி, 7 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் கீழ், பதிவுச் சான்றிதழை, படிவம் II இல் வழங்க வேண்டும்.";

(2) 23 ஆம் விதியைச் சேர்ந்த, (2) துணை விதியில், "அறுபது நாட்கள்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "முப்பது நாட்கள்" என்ற சொற்கள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**பி. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்**,
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.